Before the Court of Chief judicial Magistrate Cum Special judge, Kanyakumari District @ Nagercoil.

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167263

1. District மாவட்டம் : Kanyakumari PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption. Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 05 Date: நாள் 31.05.202[4]

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: –
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: –
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 30.05.2024 Date from : நாள் முதல் – Date to : நாள் வரை –
   Time Period : நேர அளவு Before 20.50hrs on 30/05/2024 Time from : நேரம் முதல் – Time to : நேரம் வரை –
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.05.2024 Time : நேரம் 09.00hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 31.05.2024. Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Sub-Registrar office - Kottaram About 15kms East.
   Beat Number : முறைக் காவல் எண் – (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. B. JeganBabu (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Boothalingam.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian. (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Deputy Tahsildar (Election) (g) Address : முகவரி Nagercoil Corporation, Kanyakumari District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tr. S. Aprose, Assistant, age-32/24 I/c. Sub. Registrar, Kottaram - SubRegistrar offi[ce]
   2. Tr. A. MohanBabu, age-39/24, Junior Assistant Kottaram Sub. Registrar office

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Smt. T.T. Rema. Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 31.5.24.

[signature] 31/5/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 31.05.2024 11.30 Hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. HECTOR DHARMA RAJ
Rank: நிலை Addl. Supdt. of Police No. எண்
Vigilance & Anti-Corruption
Kanyakumari.

கன்னியாகுமரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 5/2024 முதல் தகவல் அறிக்கை வரிசை எண் 12 –ன் இணைப்பு.

மதிப்பிற்குரிய அய்யா,

| குற்ற அலுவலர்கள் :- | பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :- |
|---|---|
| 1.திரு.S.அப்ரோஸ், வயது- 32/24, உதவியாளர், சார்பதிவாளர் பொறுப்பு, கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.<br><br>2.திரு.ஆ.மோகன்பாபு, வயது 39/24 இளநிலை உதவியாளர் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம். | இன்று 31.05.2024 காலை 09.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் கூடுதல் கண்காணிப்பாளர் G.ஹெக்டர் தர்மராஜ் ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது திரு.B.ஜெகன்பாபு, த-பெ திரு.பூதலிங்கம், துணை வட்டாட்சியர் (தேர்தல்) நாகர்கோவில் மாநகராட்சி அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன், கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கைபற்றப்பட்ட ஆவணங்கள், செயல்முறை நடவடிக்கை நாள். 30.05.2024 மற்றும் ரூ.1,03,500/- ஆகியவற்றை இணைத்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- |

அனுப்புநர் திரு.B.ஜெகன்பாபு, த-பெ திரு.பூதலிங்கம், துணை வட்டாட்சியர் (தேர்தல்) நாகர்கோவில் மாநகராட்சி. பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில்.

அய்யா, நான் 30.05.2024-ம் தேதி எனது அலுவலகத்தில் பணியிலிருந்தபோது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது அவர்களது உத்தரவின்படி மாலை சுமார் 17.00 மணிக்கு நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திற்கு திடீர் தணிக்கைக்கு அரசு சாட்சியாக பணிபுரிய வந்து நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் கூடுதல் கண்காணிப்பாளராகிய தங்களை நேரில் வந்து சந்தித்தேன். அப்போது நீங்கள் என்னிடம் கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திரு.S.அப்ரோஸ் என்பவர் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவர் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொதுமக்களிடமிருந்து சம்பந்தப்பட்ட பத்திர எழுத்தர்கள் மூலமாக அலுவலக நேரம் முடிந்து, அலுவலகத்தை விட்டு வெளியே செல்லும்பொழுது கையூட்டாக பணம் பெற்று

வீட்டுக்கு லஞ்ச பணத்துடன் செல்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மேற்படி சார்பதிவாளரை திடீர் தணிக்கை செய்ய வேண்டும் என்று விளக்கினீர்கள். அதன்படி 30.05.2024 அன்று மாலை சுமார் 17.30 மணிக்கு துணை ஆய்வு குழு அலுவலர் நிலையில் நானும் மற்றும் நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் கூடுதல் கண்காணிப்பாளராகிய தாங்கள் மற்றும் நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் ஆய்வாளர்கள் திரு.எஸ்.ஜாண் பெஞ்சமின், திருமதி.C.சிவசங்கரி, மற்றும் போலீஸ் பார்ட்டியினர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலகத்தில் இருந்து அரசு வாகனங்கள் TN-21AG 0777 மற்றும் TN-22 G 0470 ஆகியவைகளில் புறப்பட்டு மாலை சுமார் 18.30 மணிக்கு கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து சுமார் 1 கிமீ தூரம் உள்ள அகஸ்தீஸ்வரம் செல்லும் பாதை ஜங்ஷனில் வாகனங்களை மறைவாக நிறுத்தி விட்டு சார்பதிவாளர் அலுவலகம் முன் உள்ள கச்சேரி ரோட்டின் இரு புறமும் மறைந்து இருந்து ரகசியமாக கண்காணித்தோம். 30.05.2024 அன்று இரவு சுமார் 20.45 மணியளவில் நீல நிற ஜீன்ஸ் பேண்டும், கருப்பு சிகப்பு நிற கட்டம் போட்ட முழு கை சட்டை போட்ட நபர் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலக முன்வாசலில் வந்தார். அவருடன் நீல நிற டீ சர்ட், கரும்பச்சை நிற கட்டம் போட்ட லுங்கி அணிந்த ஒரு நபரும் வெளியே வந்தார். அவர்கள் இருவரும் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலக லைட்டை அணைத்து விட்டு வெளியே வந்தார்கள். அவர்களை திடீர் தணிக்கை குழுவினராகிய நாம் அலுவலக முன் கதவு முன் வைத்து நிறுத்தி நான் விசாரிக்க நீல நிற ஜீன்ஸ் பேண்டும், கருப்பு சிகப்பு நிற கட்டம் போட்ட முழு கை சட்டை போட்ட நபர் தன்னுடைய பெயர் திரு.S. அப்ரோஸ், த-பெ சவுக்கத் என்றும் தான் பொறுப்பு சார் பதிவாளர் ஆக ஜனவரி 2024 முதல் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் துணை ஆய்வு குழு அலுவலர் நிலையில் உள்ள நான், நீல நிற டீ சர்ட், கரும்பச்சை நிற கட்டம் போட்ட லுங்கி அணிந்த நபரிடம் அவர் யார் என்று விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் திரு.ஆ.மோகன் பாபு என்றும் தான் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 24.04.2024 முதல் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் நானும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அதிகாரிகளும் மேற்படி திரு.அப்ரோஸ் மற்றும் திரு.மோகன் பாபு ஆகியோரிடம் தங்களுக்கு வந்த ரகசிய புகார் அடிப்படையில் மேற்படி இரண்டு நபர்களையும் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தையும் சோதனை இட வேண்டும் என்று தெரிவித்து அவர்களை அலுவலகம் உள்ளே வரச்செய்தோம். பின்னர் நான் திரு.S.அப்ரோஸ் என்பவரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலர்கள் முன்னிலையில் சோதனை யிட திரு.S.அப்ரோஸ் என்பவரின் நீல நிற ஜீன்ஸ் பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் ரூ.500 நோட்டுக்கள் 200 எண்ணங்கள் காணப்பட்டது. அதனை எண்ணி பார்க்க அதில் ரூ.1 லட்சம் இருந்தது. மேலும் துணை ஆய்வு குழு

அலுவலர் நிலையில் உள்ள நான் திரு.S.அப்ரோஸ்ஸின் இடது பக்க ஜீன்ஸ் பேண்ட் பாக்கெட்டை சோதனையிட அதில் ரூ.500 நோட்டுக்கள் 5 எண்ணங்கள் ஆக ரூ.2,500 இருந்தது. மேற்படி ரூ.1 லட்சம் மற்றும் ரூ.2,500 குறித்து நான் திரு.S.அப்ரோஸை கேட்க திரு.S.அப்ரோஸ் மேற்படி பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி ரூ.1,02,500 திரு.S.அப்ரோஸ் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்று பதிவு செய்த ஆவணங்களுக்காக ஆவண எழுத்தர்களிடம் இருந்து கையூட்டாக பெற்ற பணம் என்று கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் துணை ஆய்வு குழு அலுவலர் நிலையில் உள்ள நான் திரு.S.அப்ரோஸ்ஸின் ஜீன்ஸ் பேண்டின் இடது பக்க பாக்கெட்டை சோதனை இட அதில் பிறவுன் நிற மணிபர்ஸ் இருந்தது. அதனை சோதனையிட அதில் 2 ரூ.100 நோட்டுக்களும் 1 ரூ.10 நோட்டும் காணப்பட்டது. இது குறித்து நான் திரு.S.அப்ரோஸ்ஸை கேட்க அவர் இந்த பணம் தான் வீட்டில் இருந்து கொண்டு வந்ததாக தெரிவித்தார். மேலும் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேடை சரிபார்க்க 30.05.2024 தேதியில் திரு.S.அப்ரோஸ் ரூ.210 என்று குறிப்பிட்டிருந்தார். எனவே மேற்படி பணம் ரூ.210 திரு.S.அப்ரோஸ் வீட்டில் இருந்து வரும்போதே கொண்டு வந்த பணம் என்று கருதி ரூ.210 திரு.S.அப்ரோஸ்ஸிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி தனிநபர் பண இருப்பு பதிவேட்டின் 30.05.2024 தேதிய பக்கத்தில் நான் Seen என்று எழுதி கையொப்பம் செய்தேன். மேற்படி தனிநபர் பண இருப்பு பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் நீல நிற டீ சர்ட், கரும்பச்சை நிற கட்டம் போட்ட லுங்கி அணிந்த திரு.மோகன்பாபு என்பவரிடம் நான் எதற்காக அலுவலகத்தில் டீசர்ட் மற்றும் லுங்கி அணிந்து நிற்கிறீர்கள் என்று கேட்க அவர் அலுவலகத்தை பூட்ட வந்துள்ளதாக தெரிவித்தார். பின்னர் நான் திரு.மோகன் பாபுவிடம் உங்களின் வீடு எங்குள்ளது என்று கேட்க நாகர்கோவில் எஸ்எல்பி பள்ளி முத்தாரம்மன் கோயில் பக்கம் ஒரு வீட்டில் வாடகைக்கு குடியிருப்பதாகவும் தன்னுடைய சொந்த மாவட்டம் தேனி மாவட்டம் என்றும் தெரிவித்தார். கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து சுமார் 15 கிமீ தூரம் உள்ள நாகர்கோவிலில் இருந்து கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலக கதவை பூட்ட டீசர்ட் லுங்கியுடன் வந்துள்ளேன் என்ற திரு.மோகன் பாபுவின் கூற்று ஏற்க கூடியது அல்ல. அவரை நான் சோதனையிட மேற்படி மோகன் பாபுவின் டீசர்ட்டின் இடது புற முன் பாக்கெட்டில் 2 ரூ.500 நோட்டுக்கள் ஆக ரூ.1000 இருந்தது. 30.05.2024 தேதிய வருகை பதிவேடை பார்வையிட்டதில் திரு.மோகன் பாபு அலுவலகம் வந்தமைக்கு சுருக்கொப்பம் போட்டுள்ளார். எனவே அலுவலகம் முடிந்து சுமார் 15 கிமீ தூரம் உள்ள நாகர்கோவில் போய் விட்டு அலுவலகம் பூட்ட வந்துள்ளதாக கூறுவது ஏற்க கூடியது அல்ல. எனவே அவர் டி சர்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.1000 அவர் ஆவண எழுத்தர்களிடம் இருந்து கையூட்டாக பெற்ற பணம் என்று கருதி வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி வருகை பதிவேட்டில் நான் Seen என்று எழுதி கையொப்பம் இட்டேன். கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலக

2024-ஆம் ஆண்டு வருகைப்பதிவேட்டை பார்வையிட்டதில் 30.05.2024-ம் தேதி திரு.து.மோகன்குமார், சார்பதிவாளர், திரு.S.அப்ரோஸ், உதவியாளர், திரு.ஆ.மோகன்பாபு, இளநிலை உதவியாளர் மற்றும் திரு.சு.ம.சுமன்பாபு, இளநிலை உதவியாளர் ஆகியோர் சுருக்கொப்பம் செய்துள்ளனர். மேலும் திரு.ஜி.பரமகுரு, உதவியாளர் என்பவர் இடலாக்குடி சார்பதிவாளர் அலுவலகத்திலும், திரு.நா.இராமசந்திரபிள்ளை, உதவியாளர் என்பவர் இராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திலும், திரு.கோ.சந்தோஷ்குமார், இளநிலை உதவியாளர் என்பவர் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலும், திரு.க.சிவசக்தி முருகன், இளநிலை உதவியாளர் என்பவர் பள்ளியாடி சார்பதிவாளர் அலுவலகத்திலும் அயல்பணியாக இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் மேற்படி கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்தபோது எந்த பணமும் காணப்படவில்லை. இதன்மூலம் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக உள்ள திரு.S.அப்ரோஸ் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.ஆ.மோகன்பாபு, ஆகியோர் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொதுமக்களிடமிருந்து சம்பந்தப்பட்ட பத்திர எழுத்தர்கள் மூலமாக அலுவலக நேரம் முடிந்து, அலுவலகத்தை விட்டு வெளியே செல்லும்பொழுது கையூட்டாக பணம் பெறும் குற்றச்செய்கையும் புலனாகிறது. மேலும் பொது ஊழியர்களான கொட்டாரம் பொறுப்பு சார்பதிவாளர் திரு.S.அப்ரோஸ் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.ஆ.மோகன்பாபு, லஞ்சம் பெற்று குற்றமுறு நடவடிக்கையில் (Criminal Misconduct) ஈடுபட்டு வருவது தெரியவருகிறது. எனவே கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரூ.1,03,500 /- ஆவணங்கள் மற்றும் செயல்முறை நடவடிக்கை ஆகியவற்றை தக்க மேல்நடவடிக்கைக்காக எனது இந்த புகார் மனுவுடன் தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன். S/d B.Jeganbabu, Dy Tahsildar(Election), Nagercoil Corporation Office, 31.05.2024. Sir, Received by me on 31.05.2024 at 09.00 hrs and registered a case in Kanyakumari Vigilance and Anti-Corruption Cr.No.5/2024 u/s. 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 against Tr.S.Aprose and Tr.A.Mohan Babu on 31.05.2024 today at 10.00 hrs S/d (G.HECTOR DHARMA RAJ) ADSP, V&AC, Kanyakumari.

The original FIR along with the complaint, Proceedings dated 30.05.2024 prepared at the office of sub registrar Kottaram between 30.05.2024 at 20.50hrs and 31.05.2024 at 00.30 hrs, Seized amount of Rs.1,03,500/-, seized documents were sent to the Chief Judicial Magistrate cum Special Judge, Kanyakumari

District @ Nagercoil for the trial offences under PC Act cases and the copies sent to the concerned officers.

Addl. Supdt. of Police
Vigilance and Anti Corruption
Kanyakumari Detachment
@ Nagercoil